1981 ஏப்ரல் 24]

இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழுதடைந்த குடி தண்ணீர்க் குழாய்களை சீர் செய்தல்.

* வினா எண் 861-திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பழுதடைந்த குடிதண்ணீர் குழாய்களைச் சீர்செய்வதில் தாமதம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) தாமதத்தை தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தெரியும்.

(ஆ) தாமதத்தை தவிர்க்க வேண்டி, கைப்பம்புகள் மற்றும் மின்விசைப் பம்புகள் பராமரிப்புக்காக ஒவ்வொரு ஒன்றியத்திலும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சீர் செய்ய நியமிக்கப்பட்டுள்ள பொருத்துனர்களைத் தவிர, இளநிலைப் பொறியாளர் மற்றும் அலுவலர்களைக் கொண்ட நடமாடும் பராமரிப்புக் குழு (Mobile Team) அமைக்கப்பட்டு, ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. பழுது பார்ப்பதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் இதில் கவனம் செலுத்தப்படுகிறது.

திரு. தி. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள குடிநீர் குழாய்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் போன்றவற்றை வாரியம் பராமரித்து வருகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாக மெக்கானிக் நியமித்திருப்பதாகச் சொன்னார்கள். அவர்களால் பெரிய ரிப்பேர்களைச் செய்ய முடியவில்லை. காரணம், அவர்களிடம் அதற்கேற்ற சாதனங்கள் இல்லை என்று சொல்லப்

படுகிறது. இந்தக் குறையைப் போக்குகின்ற வகையில் வாரியம் மேற்கொண்டிருக்கின்ற இந்தப் பொறுப்பை மீண்டும் ஊராட்சி ஒன்றியத்திடமே கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சீரிய ஆலோசனையை ஆழமாகப் பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-40.]

திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு அதிகாரியை நியமித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 45 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஆகவே ஒரு பொறியாளர் எந்த வேலையைக் கவனிப்பார்? மேலும் தற்போது பெரும்பாலும் ஊராட்சி ஒன்றியங்களிலே குடிநீர் பஞ்சம் அதிகமாக இருக்கின்றது. ஆகவே அருமை நண்பர் திரு. அன்பழகன் அவர்கள் சொன்னது போன்று இந்தப் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடமே கொடுக்க மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா? குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க ஆழமான உத்தரவை மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம் என்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

(1) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தனித்தனியாக ஒரு பொறுப்பினரும்;

(2) ஆயிரம் பம்புகளுக்கு ஒரு பராமரிப்புக் குழு என்பதற்கு பதிலாக, 500 பம்புகளுக்கு ஒரு பராமரிப்புக் குழு எனவும்;

(3) மேலும் 4 புதிய பராமரிப்பு குழுவை அமைக்க வாரியத்திற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது எனவும்;

(4) தற்போது அளித்துள்ள அனுமதியின்படி ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு உதவி பொறியாளரும், 3 மின் இணைப்பாளர்களும், மற்றும் ஒரு ஜீப்புடன் கூட ஓட்டுநரும் கொண்ட 15 பராமரிப்புக் குழுக்கள் பணிகளை உடனுக்குடன் பார்த்து, பழுதுகளை சரி செய்யும் என்வும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 24]

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இதிலும் திருப்தி இல்லை என்று சொன்னால், உள்ளாட்சித் துறை தேர்தல் வந்தபிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன ஆலோசனைகளை பரிசீலனை செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் சொந்தமான மேல்நிலைத் தொட்டிகளில் உள்ள நீர் பலவிதமான கலர்களில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. உட்காருங்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும் போது குடி தண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு பலவிதமான நடவடிக்கைகளை எடுத்ததைப் பற்றிச் சொன்னார்கள். அவைகளை எல்லாம் நாங்கள் பாராட்டுகிறோம். இருந்தாலும் கூட என்னுடைய நிலக்கோட்டைத் தொகுதியிலே மாத்திரம் கிட்டத்தட்ட 37 போரிங் பம்புகள் போடப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு ஓவர் ஹெட்டாங்குகள் கட்டப்பட்டு, தண்ணீர் நிரப்பப்பட்டு, மோட்டார்கள் போட்டு அவைகளுக்கு மின் இணைப்புக் கூட கொடுத்தாகிவிட்டாலும் கூட, அவைகள் திறந்தபாடாக இல்லை. என்ன காரணம் என்று கேட்டால், சாவியை எடுத்துக்கொண்டு போய்விட்டதாகச் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட என்ஜினியர்களுக்குத் தொலைபேசி மூலமாகவாவது ஆணைகள் இட்டு உடனடியாக இந்தப் பிரச்னையை போக்குவதற்கு வழிவகை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடி தண்ணீர் வடிகால் வாரியம் வார்புட்டிங்கில் இப்பொழுது சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு வருகிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். என்னிடத்திலே கூட சிலர் நேரிடையாகப் பாராட்டி இருக்கிறார்கள். (கூச்சல்) ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்துக்களுக்கு மதிப்பு கொடுத்து, எங்கெங்கே எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற தகவலுக்கு முரணாக இருக்கிறது என்று எடுத்துச் சொன்னால் உடனடியாக அதையும் வார்புட்டிங்கில் கவனிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுடைய குடிநீர் பிரச்னைகளெல்லாம், பெரும்பாலும் பூர்த்தி செய்யக்கூடிய குழாய்கள் எல்லாம் 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்டவை, அவைகள் பழுதடைந்திருக்கின்றன. அந்தப் பழுதடைந்த குழாய்களை மாற்றி, புதிய குழாய்களைப் போடுவதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல உடனடியாக எங்கெங்கு என்னென்ன கவனிக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் நினைக்கிறார்களோ, அவைகளையெல்லாம், கேள்வி நேரம் முடிந்தவுடனே குறிப்பு எடுத்து கொடுப்பார்களேயானால், தொலைபேசி மூலம் சொல்லி ஆவன செய்ய அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. ஆர். தியாகராசன் : மரியாதைக்குரிய சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வாரிய அமைச்சர் அவர்கள் இதுவரைக்கும் அந்த குடிநீர் வடிகால் வாரியத்திலே, எத்தனை ஆழ்கிணறுகளிலே எத்தனை நீர் மூழ்கி மோட்டார் பம்புகள் வெளியே எடுக்கப்படாமல் மூழ்கிக் கிடக்கின்றன என்பதை அறிவாரா, அதை அவைக்கு அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், அதற்கான தகுந்த பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழாய்கிணறுகள் போடுகிறபோது, எவ்வளவு ஆழம் போடுகிறார்களோ, அந்த அளவுக்கு பம்பிங் ராடுகள் போடுவது இல்லை. அந்த அளவுக்கு பம்பிங் ராடுகளைப் போட்டால், குழாய்கள் போடுவதைக் கூட எண்ணிக்கையில் குறைத்து சிக்கனப்படுத்தலாம். அரசுக்கு செலவும் குறையும். ஆகவே எவ்வளவு ஆழம் கிணறு தோண்டுகிறார்களோ, அந்த அளவுக்கு பம்பிங் ராடுகள் போடுவதற்கான ஆணை இடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்கிற ஆலோசனையைப் பற்றி என்னிடத்திலே எழுத்து மூலமாகக் கொடுப்பார்களேயானால், அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி ஆவன செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

1981 ஏப்ரல் 24]

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்களை மேற்கொள்ளுகிற பணிகளை வாரியம் மேற்கொண்டாலும், பராமரிப்பு பொறுப்பினையாவது ஊராட்சி ஒன்றியங்களிடம் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் தான் பராமரித்து வருகின்றன. ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய ஊரக குடிதண்ணீர் வசதி திட்டத்தில் செய்யக் கூடியவைகளைத்தான் இந்த வடிகால் வாரியம் எடுத்துக் கொண்டிருக்கிறது. என்ன இருந்தாலும் எல்லாப் பிரச்னைகளுக்கும் ஒரு மறு பரிசீலனை தேவை என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் பலருடைய பொதுவான கருத்தாக இருப்பதினால், தேர்தல் முடிந்த பிறகு, நாம் அந்த வேலைகளில் ஈடுபட்டு, எல்லோரும் ஆரஅமர உட்கார்ந்து, அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

இடையன்குளம் பஞ்சாயத்துப் பகுதியிலுள்ள ஸ்ரீராம் வச்சரத் தொழிற்சாலை.

*வினா எண் 862—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி இடையன்குளம் பஞ்சாயத்து எல்லையில் உள்ள ஸ்ரீராம் வச்சரத் தொழிற்சாலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால் சாகுபடி நிலங்கள் பாதிக்கப்படுகின்றனவா -

(ஆ) ஆம் எனில், மேற்படி கழிவு நீரை அப்புறப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.